09.01.2025 எம்.சி.ஓ.பி. எண். 162/2018 ம.சா.1 ராமச்சந்திரன்

<u>குறுக்கு விசாரணை</u>

விபத்தில் அடிப்பட்டது என்னுடைய மகன். 2018 ஆம் ஆண்டு விபத்து நடந்தது. விபத்து தொடர்பாக அனக்காவூர் காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன். விபத்தை நான் நேரடியாக பார்த்தேன். சத்யா என்பவர் என்னுடைய நிலத்தை உழுவதற்காக டிராக்டரை எடுத்துக்கொண்டு வந்தார். என்னுடைய மகனை சத்யா தான் வீட்டிலிருந்து வந்தபோதே டிராக்டரின் மெட்காட் மீது உட்காரவைத்துக்கொண்டு வந்தார். நிலத்திற்கு வந்து கொண்டிருந்தபோதே என் மகன் கீழே விழுந்து விபத்து ஏற்பட்டுவிட்டது. என் மகனுக்கு முதுகில் அடிப்பட்டது. என் மகனுக்கு செய்யாறு அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு மேல்சிகிச்சைக்காக சென்னை இராமச்சந்திரா மருத்துவமனையில் சேர்த்தேன். கண்சாலிடேட் மருத்துவ ரசீதை தாக்கல் செய்யவில்லை என்றால் கொடுத்துள்ளேன். ம.சா.ஆ.7 ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. நான் கண்சாலிடேட் ரசீதை வேறு காப்பீட்டு நிறுவனத்தில் கொடுத்து வாங்கிவிட்டேன் என்றால் சரியல்ல. டிராக்டரில் ஓட்டுநர் மட்டும் தான் செல்லவேண்டுமென்றும் என் மகன் மெட்காட்டில் உட்கார்ந்து சென்றது காப்பீடு விதிமீறல் என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைபட்டவர் இல்லை என்றும் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.